குலதனம்

போலக் கேசதனமும், சில குடும்பங்களில் பரம்பரையாக வருவதுண்டு. கேசதனம் படைத்தவர், அது நஷ்டமாகாமல் கேசவர்த்தினியைக்கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியைக்கொண்டு அதை அடையுங்கள். சிறுவயது முதல் கேசவர்த்தினி ஒன்றையே உபயோகித்துவருவதால், இளநரை வழுக்கைகளைத் தடுத்துக் கேச ஆரோக்கியத்தையும் கேச சம்பத்தையும் தவறாமல் பெறுங்கள்.

மெலிந்து, இளைத்த சிறுவனும் தேகப்பயிற்சி ஆகாரங்களால் பருத்து அழகிய சதைக்கட்டைப்பெறுவதுபோல, அற்ப கூந்தல் படைத்தவரும் கேசவர்த்தினியைக்கொண்டு அபரிமிதமான கூந்தலைப் பெறலாம்.

குழந்தையின் கூந்தலைக் கேசவர்த்தினிகொண்டே விருத்தி செய்யுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக்காப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது விலை அணா 12; மேற்செலவு வேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலை,
ஆர். எஸ். புரம் - கோயமுத்தூர்.

கர்ப்பத்தைத்தடுக்க 'ரஹாத்'

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவறாமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.



மழை ஜலம் போவதற்கான குழாய்களும் அதன் பிட்டிங்குகளும்

எல்லா நிலைகளுக்கும் அழுத்தம், நீடித்த உழைப்பு, நம்பிக்கையான உழைப்பிற்கு வார்பட இரும்பு குழாய்களுக்கு இணையொன்றும் கிடையாது.

இந்தியாவிலேயே நவீன இயந்திர தளவாடங்களை அமைத்துள்ள ஈஸ்டர்ன் லைட் காஸ்டிங்ஸ் கம்பெனி லிமிடெட், பல வருஷங்களாக வார்பட இரும்பு தண்ணீர் குழாய்கள், இதர வகை குழாய்கள், பிட்டிங்குகள் முதலியவற்றைப் பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷனுக்குத் தயாரிக்கின்றனர்.

காட்லாகும் விலை விபரங்களும் கேட்போருக்கு அனுப்பப்படும்.

தி ஈஸ்டர்ன் லைட் காஸ்டிங் கம்பெனி லிமிடெட்.
12, மிஷன்ரோ, கல்கத்தா.
சென்னை ராஜதானி ஏஜண்டுகள் :
ஸவுத் இந்தியன் எக்ஸ்போர்ட் கம்பெனி லிமிடெட்.
தபால் பெட்டி நெ. 37, மதராஸ் ELC 3



பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

ஜகஜ்ஜாலன்

ஓர் அரிய பெரிய நூதனமான துப்பறியும் நாவல். ஜகஜ்ஜாலன் என்னும் திருடனுடைய வீரதீர பராக்கிரமங்கள். படிக்கப் படிக்க ஆச்சர்யமாயிருக்கும். 518 - பக்கங்கள் கொண்ட சுத்தப்பதிப்பு. விலை ரூ. 1—12—0 — தபாற்செலவு அணா 8.

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டை போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

Printed and Published by T. S Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor, C. R. Srinivasan, B. A

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 38 18-10-42 Price 2 Annas



மூன்று தலைமுறைகள்

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறாள்.

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON. ENGLAND

இரட்டைத் தாழ்ப்பாள்

★ ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் ★

அமெரி பேசிவிட்டார். பேச்சிலே பழைய நயமில்லை. வழ வழவென்று விட்டுக் கொடுக்காமல் பேசுவது வழக்கம். இந்த முறை அப்படியில்லை. கோபக்குறி காண்கிறது. அதற்குக் காரணம் உண்டு. இந்தியர் மாத்திரம் குறை கூறிவந்தால் கவலைப்பட்டிருக்கமாட்டார். வெளியார் வம்பு உறுத்துகிறது. அமெரிக்கரும் சீனரும் தங்கள் ஜோலியைப் பார்த்துக்கொண்டு போகக்கூடாதா? குடும்பப் பிரச்னையில் இவர்கள் ஏன் தலையிடவேண்டும்? ஜாடைமாடையாகச் சொல்லிப்பார்த்தனர்; ஏறவில்லை. பிரசாரம் செய்து பார்த்தனர்; பலிக்கவில்லை. தழுவத் தழுவத் தாவிக் குதித்தனர். மிஞ்சவிட்டால் விபரீதமாக முடியும்போலிருந்தது. சாக்ஷி பக்கம் திரும்ப ஆரம்பித்து விட்டனர் இந்தியர். சமாதானம் பேச ஆங்கிலேயர் சிலரும் சாக்ஷியை கேட்க ஆரம்பித்து விட்டனர். பொறுக்கவில்லை அமெரிக்கு. உள்ளதை விண்டு பேசிவிட்டார்.

இந்தியாவை விட்டு விலகென்று சொல்ல யாருக்கு உரிமையுண்டு? அதிகாரம் உள்ளளவும் செலுத்தத் தயங்குவானேன்? சென்ற காலத்தில் செய்ததற்கு வெட்கப்படத் தேவையில்லை. வருங்காலத்தைக் கண்டு அஞ்சவும் தேவையில்லை. ஒரு கைபார்த்து விடுவோமென்கிறார் அமெரி. கேவலம் ராஜீயப் பிரச்னை முன் நின்றால் குறைகூறுவதற்கில்லை. அதிகாரத்தை விட்டுக் கொடுக்க யாருக்குத்தான் மனமிருக்கும்? மனித இயல்புக்கு மாறானது. கேட்பவர் கேட்டுக் கொண்டுதானிருப்பார்; கொடுக்க மனமில்லாதவர் வாயிதா வைத்துக்கொண்டுதானிருப்பர். வேளை வந்தால் வேற்றுமை விலகும். இன்னும் வரவில்லை. ஆனால். காலம் கெட்டுக் கிடக்கிறது. ராஜீயப்பிரச்னையோடு ராணுவப் பிரச்னையும் பிணைக்கப்பட்டுவிட்டது. பகைவனை வெல்ல பலம் பூராவும் தேவை. பலம் திரட்ட நடைமுதல் வழி உதவாது. வேறு வழியுண்டு. தனக்குத் தெரியாவிட்டால் சொன்னாலாவது கேட்கலாம். கேட்க மனமில்லை. சொல்பவரைக் கண்டு சீறுகின்றனர். நிதானத்தை இழந்தால் நிலைமை திருந்திவிடுமா?

பழியொரு பக்கம் பாவமொரு பக்கமென்று சொல்வார்கள். பேசிப் பேசிக் காங்கிரஸ் மீது பழியேற்றி விட்டனர். பழிக்கப் பழிக்கக் காங்கிரஸுக்கு பலம் ஏறுமேயொழிய இறங்காது. காங்கிரஸ்காரரைச் சிறையிலிடலாம்; காங்கிரஸ் கக்ஷியைச் சிதைக்கலாம். காங்கிரஸை நசுக்க முடியாது. காரணமென்ன? காங்கிரஸ் அமானுஷ்யமானது: நாட்டின் சுதந்திர தாகத்தை குறிப்பிடுவது. சுதந்திரம் சித்திக்கும் வரையில் சிரஞ்சீவி பட்டம் பெற்றது. காங்கிரஸுடன் சமாதானமில்லையென்றால் நாட்டுக்குச் சுதந்திரமில்லையென்றே மக்கள் கொள்வர். மக்களை மதவாரியாகப் பிரிக்கலாம்; இனவாரியாகப் பிரிக்கலாம். ஒரோரு சமயத்தில் ஒரோரு கோஷ்டியைத் தட்டிக் கொடுக்கலாம். எல்லோரையும் என்றைக்கும் ஏய்ப்பதற்கில்லை. காலங்கடந்த முறைகளை இன்று கையாளுவது பிரிட்டிஷ் மகாஜனங்களுக்கே துரோகம் செய்வதாகும். உண்மையை அவர்கள் அறியவில்லை. அறிந்தால் மன்னிக்கமாட்டார்கள். அறிவுறுத்த அன்னியர் முனைய வேண்டும். ஜனநாயகத்திற்குப் போராடுவது உண்மையானால் அவர்களுடைய கடமை அது.

அமெரி ஏதேதோ பேசியிருக்கிறார். நொண்டிச் சமாதானங்களும் நூதன சித்தாந்தங்களும் மலிந்து கிடக்கின்றன. தொடர்ந்து ஆராய்வது வீண் கெட்ட வேலை. இடையிடையே சிலர் குறுக்கிட்டு கேள்வி கேட்டிருக்கின்றனர். சரியான பதில் இல்லை. சொல்வது சுலபமல்ல. மற்றும் சிலர் கண்டித்திருக்கின்றனர். கண்டனப் பேச்சின் விவரம் இங்கே எட்டவில்லை. ஆனால், எட்டினது போதும். சந்தேகம் கொள்ள இனி இடமில்லை; சர்ச்சிலைப் பிரதம மந்திரியாகக் கொண்ட கவர்ன்மெண்டிடமிருந்து பெரியபுத்தி எதிர்பார்ப்பதற்கில்லை. பார்லிமெண்டு விவாதம் கிரிப்ஸ் திட்டத்திற்குப் புதிய கருத்தையும் கற்பித்து விட்டது. அதில் கண்ட இடைக்கால கவர்ன்மெண்டின் பவிஷை ஆற்றி விட்டார் அமெரி. மாறுதல் எது ஏற்பட்டாலும் பொறுப்பு பிரிட்டனிடம் தான் இருக்கும் என்கிறார் அவர். பூசாரியின் புரட்டு பிள்ளையாரையே பழிக்கிறது. பிரிட்டிஷாருக்கு இது சோதனை காலம்; என்ன செய்யப் போகிறார்கள்?

அல்லா பக்ஷ் பதவி நீக்கம்

"கவர்னரின் நம்பிக்கையை இழந்து விட்டதால் ஸிந்து பிரதம மந்திரி ஜனாப் அல்லாபக்ஷ் சென்ற 10 ந் தேதி காலை பதவியிலிருந்து நீக்கப்பட்டு விட்டார். பதவியைத் தாமாகவே ராஜிநாமா செய்ய மறுத்ததாலேயே கவர்னர் அவரை நீக்கும்படி ஆயிற்று எனத் தெரிகிறது.

கவர்னர் அழைப்பின் பேரில் சுயேச்சைக் கட்சி மெம்பரான ஸர் குலாம் ஹுஸேன் ஹிதயதுல்லா மந்திரி சபையை அமைக்க இசைந்திருக்கிறார்.

1935-ம் வருஷத்திய இந்திய சர்க்கார் சட்டத்தின் 51-வது பிரிவுப்படி ஜனாப் அல்லாபக்ஷ் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. கவர்னருக்குச் சம்மதம் உள்ள வரையில் தான் மந்திரிகள் உத்தியோகம் வகிக்கலாமென்று இந்தப் பிரிவு கூறுகிறது.

கவர்னர் மாளிகையிலிருந்து ஒரு அறிக்கை வெளியிடப்பட்டதில் சமீபத்தில் ஜனாப் அல்லா பக்ஷ் தமது பட்டங்களைத் துறந்த விஷயமாகவும், அதற்கு அவர் கூறியுள்ள காரணங்களைப்பற்றியும் ஸிந்து கவர்னர் அவருடன் சம்பாஷித்ததாகவும் இந்த சம்பாஷணையின் பயனாக மேலும் அவர் தமது நம்பிக்கையைப்பெறவில்லை, ஆகவே இனியும் பதவியிலிருக்கக்கூடாதென்று ஜனாப் அல்லா பக்ஷுக்குச் சொல்லுவதைத் தவிர கவர்னருக்கு வேறு வழியில்லாமல் போனதென்றும். குறிப்பிடப்பட்டது.

* * * *

ஹிந்து மகாசபைக்கமிட்டி தந்தி

இந்தியப்பிரச்னையில் தலையிட்டுத் தேசிய ஸர்க்கார் ஏற்படுத்தும் விஷயத்திலும், இந்தியாவுக்குச் சுதந்திரமுண்டென்று அறிவிக்கும் விஷயத்திலும், உதவி செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு டாக்டர் சியாமப் பிரஸாத் முகர்ஜியும், ஹிந்து மகா சபையின் விசேஷக் கமிட்டி மெம்பர்களும் ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்கும் மார்ஷல் சியாங் கே ஷேக்குக்கும் ஓர் அவசரத் தந்தி அனுப்பியிருக்கின்றனர். தந்தியின் விவரம் வருமாறு:—

இந்திய அரசியல் நெருக்கடியைத் தீர்க்கும் விஷயத்தில் முன் வந்து முயற்சி செய்ய வேண்டுமென்றும், இந்தியர்களிடம் அதிகாரத்தை மாற்றிப்பொது எதிரியை எதிர்க்கும் காரியத்தில் தேசமக்களின் அபிப்பிராயத்தைத் திரட்ட தேசிய சர்க்காரை ஏற்படுத்த வேண்டுமென்றும், பிரிட்டிஷ் ஸர்க்காரிடம் தெரிவிக்கப்பட்டது. இந்திய நெருக்கடிக்கு முக்கியமான காரணம் பிரிட்டிஷ் அதிகாரிகளின் மனோபாவமே. மகாத்மாஜியைப் பார்ப்பதற்கு நாங்கள் அனுமதி கோரியதை வைஸ்ராய் மறுத்து விட்டார். மிஸ்டர் சர்ச்சில சமீபத்தில் காமன்ஸ் சபையில் செய்த பிரசங்கத்தால் நிலைமை இன்னும் கேவலமாகிவிட்டது.

வெறும் அடக்குமுறையால் மட்டும் பரிகாரம் கிட்டாது. இந்தியா முக்கியமான ராணுவ தளமாக இருக்கிறது. எனவே இந்திய நிலைமை உள்நாட்டுப் பிரச்னையாகாது. நேசநாடுகள் இது பற்றி தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். ஜனநாயகக் கட்சிகளின் நோக்கத்துக்கு ஆசியாவைச் சேர்ந்தவர்கள் அளிக்கக் கூடிய ஆதரவு இந்தியாவில் நடக்கும் விஷயத்தைப் பொறுத்திருக்கிறது.

நேசநாடுகளின் வெற்றியை முன்னிட்டு இந்தியா விஷயத்தில் நீங்கள் தலையிடும்படி வற்புறுத்துகிறோம்.

* * * *

மிஸ்டர் அமெரியின் பழைய பாடம்

இம்மாதம் 8-ந் தேதி காமன்ஸ் சபையில் இந்தியா மந்திரியான மிஸ்டர் அமெரி இந்தியா—பர்மா (தற்காலிக—சில்லரை ஷரத்துகள்) மசோதாவை ஒவ்வொரு பிரிவாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற பிரேரணையைக் கொண்டு வந்து பேசுகையில் பின் வருமாறு குறிப்பிட்டார்:—

"காங்கிரஸ் தலைவர்கள் எந்தத் தொல்லைகளுக்கு ஜவாப்தாரியாக இருந்து வந்திருக்கிறார்களோ, அந்தத் தொல்லைகள் திரும்ப ஏற்படும் என்ற அபாயமிருக்கும் வரையில், இந்தியாவைச் சட்ட விரோதமான புரட்சிகரமான முறைகள் மூலம் கட்டுப்பாடு செய்யும் முறையை அடியோடு கை விட்டு விட்டதாகவும் நம்முடனும் நாட்டிலுள்ள இதர சகோதரப் பிரஜைகளுடனும் உடன்பாடுக்கு வரத் தயாராக இருப்பதாகவும் அவர்கள் அதிகாரிகளுக்குத் தெளிவாகத் தெரிவிக்கும் வரையில், இந்தியா கவர்ன்மெண்டார் காங்கிரஸ் தலைவர்களுடன் ராஜி பேச முடியாது. மற்றவர்களையும் ராஜி பேச அனுமதிக்க முடியாது. தற்கால மனோபாவத்துடன் காங்கிரஸ் இருக்கும் வரையில் அதைத் திருப்தி செய்ய முடியுமென்று தோன்றவில்லை. காங்கிரஸைத் திருப்தி செய்தால் முஸ்லிம்களுடனும் இதர கட்சிகளுடனும் பெரிய கஷ்டங்களை உண்டாக்கும்."

(அடுத்த பக்கம் பார்க்க)

சென்றவார நிகழ்ச்சிகள்

குட்டிக் கதை

மனித சுபாவம்

★ ★

"ரேவ்தி" எழுதியது

"மானம் இருட்டிண்டு வரது; சோ என்று மழை கொட்டப் போரது! இதுலெ சமுத்திர ஸ்நாநத்துக்குப் போகாட்டால் என்ன?" என்று கல்யாணி ஜன்னலை நோக்கியவாறு சொன்னாள்.

"பொழுது விடியரத்துக்குள் ஆரம்பிச்சுட்டாயா உன் புராணத்தை? நான் எந்தக் காரியம் செய்தாலும், அதுக்கு ஒரு தடை சொல்லாட்டா உனக்கு சரிப்படாது?" என்று அவள் கணவன் கசந்து கொண்டான்.

"ஆமாம்! இல்லாட்டா நான் சொல்ரத்தை எல்லாம் நீங்க கேட்டுண்டுதான் இருக்கேள்! இன்னிக்கு எனக்கு என்னமோ மனசு சரியாயில்லை; சொன்னேன். அவா, அவா இஷ்டப்படி செய்யுங்கோ. மஹாபலிபுரமென்ன? காசிக்கே போரேன்னு சொன்னாக்கூட என்னால் தடுக்க முடியுமா என்ன?" என்று சலித்துக் கொண்டே, கல்யாணி தன் கணவன் பிரயாணத்துக்கு ஏற்பாடுகள் செய்ய உள்ளே சென்றாள்.

கல்யாணி, வாசலுக்கும் உள்ளுக்கும் கூட்டில் அடைத்த புலிபோல் நடந்து கொண்டிருந்தாள். நிமிஷத்துக்கு நிமிஷம் கடியாரத்தை நோக்கினாள். மணி எட்டாகி விட்டது! ஒன்பது, பத்து அடித்து விட்டது! அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை! "போகும்போதே, அச்சானிய மாட்டம் என்னமோ உளறினேனே?" என்று நினைத்த போது அவள் கண்களில் கண்ணீர் பெருகிற்று.

மனதை திடப்படுத்திக் கொண்டு, பேபரை எடுத்து வாசிக்க ஆரம்பித்தாள். முதலில் அவள் கண்களில் பட்டது இரு வாலிபர்கள் சமுத்திரத்தில் மூழ்கி இறந்த செய்திதான். கைகள் நடுங்க அப்படியே பேபரைக் கீழே போட்டு விட்டாள்.

மறுபடியும் வாசல் பக்கம் சென்றாள். எங்கும் ஒரே இருட்டாய் இருந்தது. அங்கு இருட்டில் ஒரு சிறிய வெளிச்சம் தோன்றினதும் அவள் உள்ளத்தில் புது தைரியம் தோன்றும். வெளிச்சம் வீட்டைக் கடந்து சென்றதும், அவள் திகில் பன்மடங்கு அதிகரிக்கும்.

"அவர் ரெயில் தப்பி இருக்கும். சிநேகிதர் வீட்டில் கட்டாயப்படுத்தி இருப்பார்கள்!" என்று அவள் தன் மனதை தைரியப் படுத்திக் கொள்ளும் போதெல்லாம் அவள் கணவன் ஜலத்தில் மிதப்பது போல கோரக் காட்சி அவள் உள்ளத்தைப் பிளக்கும்.

தன்னால் என்ன செய்ய முடியுமென்றே அவளுக்குத் தோன்றவில்லை. ஒரு டாக்ஸியை வைத்துக் கொண்டு மஹாபலிபுரம் போகலாமா என்றுகூட நினைத்தது அவள் பெண் உள்ளம்.

அன்று இரவை அவள் எப்படிக் கழித்தாளோ பாவம்; நினைத்தாலே அழுகை வரும். பொழுது விடிநததும், "கல்யாணி, கல்யாணி! இன்னும் என்ன தூக்கம்? கதவைத் திற!" என்று அவள் கணவன் கதவை இடித்தான்.

கல்யாணி உள்ளத்தில் அப்பொழுது பொங்கி எழுந்த சந்தோஷத்தை யாரால் அறிய முடியும்!

"வேளா வேளைக்கு வீட்டுக்குத் திரும்பாட்டா, ஏதுடா, அவளும் நம்மைப் போல மனுஷிதானே என்கிற எண்ணமே கிடையாது!" என்று சலித்துக் கொண்டே கதவைத் திறந்தாள்.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரம்

★

தேவநாகரி மூலமும், ஸ்ரீமத் ஆதி சங்கர ஸ்ரீ பகவத் பாதர்கள் பாஷ்யத்திற்கு ஸ்ரீ வே. நாராயணன் செய்த தமிழ் அனுவாதமும்—பி. ஜி. பால் அண்டு கம்பெனி, சென்னை—விலை ரூபா. 1-0-0 சுதேசமித்திரன் புஸ்தகசாலைகள் எல்லாவற்றிலும் கிடைக்கும்.

"சிறிதே முயற்சி செய்து பெரிய பலனை அடைய வேண்டும். அதற்கு உபாயம் என்ன? ஜன்ம ஸம்சாரங்களினின்று விடுதலை பெறுவது எப்படி?" என்று யுதிஷ்டிரர் கேட்க, அதற்கு பீஷ்மாச்சார்யர் "புருஷோத்தமருடைய குணங்களையும் லீலைகளையும் கூறும் ஆயிரம் பெயர்களால் அவரை ஸ்துதிப்பதே உபாயம்" என்று சொல்லி அந்த ஆயிரம் நாமங்களையும் தொகுத்துச் சொன்னார்.

இதுதான் ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ர நாம ஸ்தோஸ்திரம். இதன் பெருமை ஸ்ரீ ஆதிசங்கராச்சார்யார் அருளிய பாஷ்யத்தின் தொடக்கத்திலேயே நன்கு விளக்கப்பெற்றுளது. இந்தக் கலிகாலத்தில், வாயாலே பகவந்நாமாவை உச்சரித்து கோரிய பலன்களை பெறலாம்; இதற்கு யாதொரு நியமும் வேண்டியதில்லை. எவ்வளவு பாபம் செய்திருந்தாலும் ஒரு க்ஷணம் பகவானை நினைத்தால் எவனும் நல்லவனாகி விடுவான். வாயாற் சொன்னாலே அதிக நன்மை கிடைக்கும் என்றால், ஞானத்தோடும் சிரத்தையோடும் துதித்தால் ஆகும் நன்மையைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரத்திற்கும் அதன் சங்கர பாஷ்யத்திற்கும் ஸ்ரீ வே. நாராயணையர் சிரமப்பட்டு, குற்றம் குறைக்கு இடம் தராமல், மிகப் பொருத்தமான தமிழ் மொழி பெயர்ப்பை உதவியிருக்கிறார். விஷயத்தை அறியாமல் ஸ்துதிப்பவரும், தாத்பர்யத்தை அறிந்து, உள்ளும் புறமும் ஒத்து பகவானைப் பஜிப்பதற்கு இப் புத்தகம் வழி காட்டுகிறது. இதற்கு ஸ்ரீமத் காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் அருளியிருக்கும் ஸ்ரீமுகத்திலும் இப் பெரிய கைங்கரியத்தை வெகுவாகச் சிலாகித்திருக்கிறார்கள். மஹாமஹோபாத்யாய புரொபஸர் எஸ். குப்புஸாமி சாஸ்திரிகள் எழுதியிருக்கும் முன்னுரையில், இந்த ஸஹஸ்ர நாமத்தின் மஹிமையை வெகு சாதுர்யமாகவும் லௌகிக ப்ரவ்ருத்தியுள்ளவர்களுக்கும், வைதீகமார்க்கத்தில் பற்றுதல் ஏற்படக்கூடிய விதமாகவும் குறிப்பிட்டிருப்பது இப்புத்தகத்திற்கு அதிக பெருமையைத் தருகிறது.

இந்த உத்தமமான சேவையைச் சிறப்பாகச் செய்து வைத்த ஸ்ரீ நாராயணையருக்கும், ஆஸ்திக்யம் நாட்டில் அதிகரித்து நாம் யாவரும் நலனையடைய வேண்டும் என்றும் உலகத்தில மனக்கிலேசம் மறையவேண்டும் என்றும், நல்ல நோக்கத்துடன் இதைப் பதிப்பித்து வெளியிட்ட ஸ்ரீ தே. பாலசுப்ரமணிய ஐயருக்கும் தமிழ்நாடு நன்றி பாராட்ட வேண்டும். புத்தகத்தின் விலையும் மிக ஸரஸமாகவே ஒரு ரூபா எனக் குறிப்பிடப்பட்டுளது.

சென்றவார நிகழ்ச்சிகள்

(முன் பக்கத்தொடர்ச்சி)

அமெரியின் பிரேரணை வாக்குகள் கணக்கிடப்படாமலே நிறைவேறியது.

* * * *

மிஸ்டர் வில்கி கருத்து

மிஸ்டர் வெண்டல் வில்கி இதுவரை பிரயாணம் செய்த 13 நாடுகளில் தம்மிடம் வற்புறுத்தப்பட்ட கருத்துகளின் ஸாரத்தை எடுத்துக் காட்டிய போது பின் கண்டவிதம் தெரிவித்தார்:—

"இந்நாடுகளில் ஜனங்கள் நேசக்கட்சியே வெற்றி பெற வேண்டுமென்றும், அக்கட்சி இப்போதே முன்னேறித்தாக்க வேண்டுமென்றும் கருதுகிறார்கள். ஆனால் முக்கிய ஜனநாயக நாடுகள் யுத்தத்திற்குப் பின் மற்றவர்களுக்கு சுதந்திரம் ஏற்பட வேண்டுமென வற்புறுத்துமா என்ற விஷயத்தில் அந்த ஜனங்கள் சந்தேகம் கொண்டிருக்கிறார்கள்.

இச்சந்தேகத்தால் அவர்கள் உற்சாகத்துடன் நம்து கட்சிக் காதரவாக வேலை செய்யக்கூடவில்லை. சாதாரண மக்களின் அந்தரங்கமான ஆதரவின்றி யுத்தத்தில் ஜயிப்பது மிகவும் கஷ்டம், பிறகு நிலையான சமாதானம் ஏற்படுத்துவது அநேகமாக அசாத்தியமாகும். என்னுடன் பேசிய விஷயமறிந்த பல புருஷர்களுக்கும் ஸ்திரிகளுக்கும் அட்லாண்டிக் சாஸனம் என்ற பெயர்கூட கவலையுண்டாக்கி யிருக்கிறது. அந்த சாஸனம் பஸிபிக்குக்குப் பொருந்துமென்று அதில் கையெழுத்திட்டோர் ஒப்புக்கொள்வார்களா என்று அவர்கள் கேட்கின்றனர். இவ்விஷயமாக நமது நிலைமை என்ன என்பதை நாம் தெளிவுபடுத்த வேண்டும். இந்த நிமிஷம் முதல் சீன பூமியில் ஒரு அடிகூட அங்குள்ளோரைத் தவிர வேறுயாரும் ஆளக்கூடாது; ஆள முடியாது. யுத்தத்திற்குப் பிறகன்றி, இப்போதே நாம் இதைத் தெரிவித்து விடவேண்டும்.

நேசக்கட்சியில் சேரும் காலனி மக்கள் சுதந்திரமடைவதற்கு உதவுவதற்கான ஒரு முறையை நாம் நிறுவவேண்டும். நாம் மிகக் கண்டிப்பான முறையில் உததரவாதங்கள் ஏற்படுத்தி அவற்றை எல்லா நேசநாடுகளும் கூட்டு முறையில் நிறைவேற்றி வைக்கும்படி செய்ய வேண்டும். வெற்றிபெறும்வரை இவ்விஷயங்களைக் கிளப்பாமல் மூடி வைத்திருக்க வேண்டுமெனச் சிலர் கூறுகின்றனர். உண்மை அதற்கு நேர்மாறானது, யுத்தத்திற்குப் பின் அதிக மாறுதல் செய்யப்படாதிருக்கலாம். மேலும் அது காலப் பிற்பாடானதாகி விடக்கூடும்."

* * * *

லார்ட் ஹாலிபாக்ஸ் பிரசங்கம்

இரண்டாவது போர் முனை ஏற்படுத்த வேண்டுமென ஸ்டாலின் வற்புறுத்தியது பற்றி லார்டு ஹாலிபாக்ஸ் பின்கண்ட விதம் தெரிவித்தார்:—

"மிஸ்டர் ஸ்டாலின், ஜனாதிபதி ரூஸ்வெல்ட், மிஸ்டர் சர்ச்சில் இம் மூவரில் ஒவ்வொருவரும் மற்றவர் மனத்தை நன்குணர்ந்திருக்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை. அவர்களிடை எத்தகைய தகராறும் இல்லை. மிஸ்டர் ஸ்டாலின் இரண்டாவது போர்முனைபற்றி சொன்னது ஒரு புறமிருக்கட்டும்; மற்றபடி அவரது அறிக்கை நமக்கு மிக்க தைரிய மூட்டுவதாயிருக்கிறது"

இந்தியாவைப்பற்றி லார்டு ஹாலிபாக்ஸ் குறிப்பிடுகையில், "காங்கிரஸ் இந்தியா முழுதுக்கும் பிரதிநிதியாயுள்ள ஒரு ஸ்தாபனமல்ல. காங்கிரஸ் அத்தகைய ஸ்தாபனம் என்று எண்ணுவதைப் போன்ற பிரமை எதுவுமில்லை. சென்ற 6 வாரங்களில் அந்நாட்டில் நிலைமை மிக்க அபிவிருத்தி யடைந்திருக்கிறது. சட்டமும், சமாதானமும் நிலைநிறுத்தப்பட்டதும், ஒரு சமரச ஒப்பந்தம் ஏற்பட உண்மையில் முயல்பவர்களுக்கு எங்களாலானவரை உதவி புரிவோம்" எனத் தெரிவித்தார்.

ஹிட்லரும், ஜப்பானியரும் பெருவாரியான பிரதேசங்களைக் கைப்பற்றியிருப்பது உண்மைதான் என்றும் இனி அவர்கள் எளிதாக வெற்றி பெறுவதற்கில்லையென்றும் லார்டு ஹாலிபாக்ஸ் கூறினார்.

• • • •

சீவக சிந்தாமணி-17.

சீவகனும் நந்தட்டனும்

★

—வ. வேணுகோபாலன் எழுதியது—

நந்தட்டன் நாடு முழுவதும் தேடியும் சீவகனைக் காணாமல் இராசமாபுரத்திற்கே வந்து சேர்ந்தான். சீவகனை காணாத வருத்தத்தால் அவன் மனம் சோர்வடைந்தது. ஒரு நாள் சீவகன் இரண்டாம் மனைவியான குணமாலையிருக்கும் மாளிகைக்குச் சென்றான். சீவகன் பிரிவால் நொந்து மெலிந்திருந்த குணமாலை, நந்தட்டனைக் கண்டதும் சிறிது மகிழ்ச்சி கொண்டாள், கவலையால் 'நந்தட்டன் முகம் வாடியிருப்பதைப் பார்த்ததும் குணமாலைக்கு வருத்தம் மிகுதியாயிற்று. நந்தட்டன் சீவகனுக்கு உடன் பிறந்தவன் என்ற எண்ணத்தால் அவனை உபசரிக்கத் தொடங்கினாள். பக்கத்தில் இருந்த சேடியரைப் பார்த்து, "ஐயர்க்கு இனிய உணவைச் சமைத்து கொண்டுவாருங்கள்" என்று கூறினாள். உடனே சேடியர் சென்று இனிய உணவை ஆக்கிக் கொணர்ந்தனர். குணமாலையின் கட்டளையை மீறுவதற்கு நந்தட்டன் அஞ்சினான். உடனே விருப்பும் வெறுப்பும் இல்லாமல் உணவை அருந்துவதற்கு அமர்ந்தான். அருகில் நின்று கொண்டிருந்த குணமாலை, நந்தட்டன் உணவை அருந்துவதற்கு உடன்பட்டு அமர்ந்ததைக் கண்டு வருத்தமும் கோபமும் அடைந்தாள்,

"ஐயனே! உமது தமையனார் இல்லாமலும் நீர் உணவு அருந்த உடன்பட்டீரே! என்ன கொடுமை இது! நீர் மிகவும் கொடியவர்; இவ்வாறு செய்வதற்கு நீரும் உடன்பட்டீரே? ஐயரைத் தேட உமக்கு ஆவல் இல்லை" என்று கூறிக் கொண்டே கண்ணீர் சோரக் கீழே விழுந்தாள் குணமாலை. அதைக் கண்டு நந்தட்டன் திடுக்குற்றான். தான் செய்தது தவறு என்று எண்ணிப் பேசாமல் அம்மாளிகையை விட்டு வெளியேறினான்.

குணமாலை கூறிய கொடிய சொற்களாலும் சீவகன் பிரிவாலும் நந்தட்டன் உள்ளம் புண்பட்டது. "சீவகனைக் காண்பேன்; அது முடியாது போனால் என் உயிரை விடுவேன்; இவ்விரண்டில் ஒன்றை இன்று பகற்பொழுதிற்குள் செய்து முடிப்பேன்" என்று உறுதி செய்து கொண்டே சென்றான். 'சீவகனைப் பற்றிய செய்தி காந்தருவதத்தைக்குத் தெரிந்திருக்குமோ?" என்று ஐயங் கொண்டவனாய், அவள் மாளிகைக்குச் சென்றான்.

'சீவகனைச் சேரும் நாள் என்று வருமோ?' என்று ஏங்கி வருந்தி வீணை வாசித்துக்கொண்டிருந்தாள் காந்தருவதத்தை. அப்போது நந்தட்டன், அங்கே சென்றான். ஐந்துவில் அளவு கொண்ட தூரத்தே நின்று காந்தருவதத்தையை வணங்கினான். காந்தருவதத்தை துணுக்குற்று, 'எதிரில் தலை வணங்கி நிற்பவன்' நந்தட்டனே என்று அறிந்து கொண்டாள்;

"வீரனே! அவ்விடம் அமர்க" என்றாள். நந்தட்டன் மூன்று வில் அளவு உள்ள தூரத்தே நின்று மீண்டும் வணங்கி காந்தருவதத்தையின் காலில் உள்ள சிலம்பையே பார்த்து நின்றான். அவளுடைய வாடிய முகத்தையும், மெலிந்த தோள்களையும், பசலை பரவிய மார்பையும் அவன் பார்க்கவில்லை. நந்தட்டன் மனத்தில் கோபம் பொங்கிக் கொண்டிருந்தது.

'சீவகனுடைய பிரிவுக்கு இவள் வருந்தவில்லை; இல்லையேல் இவள் காலில் சிலம்பு முதலிய அணிகள் இருப்பதற்கில்லை; உல்லாஸமாக வீணையும் வாசிக்கமாட்டாள்' என்று அவன் எண்ணினான், "அன்னையே! எம் ஐயன் எங்கு இருக்கிறான்? அவன் இறந்து விட்டால், நீர் தவம் செய்தல் ஒருகாரியம் இல்லையேல் தீயிலே வீழ்தல் ஒரு காரியம். இவ்விரண்டும் இல்லாமல், கணவன் இறந்தால் ஆபரணங்களைச் சுமந்திருப்பதை யான் கேட்டறியேன்" என்று கூறிக்கொண்டே குனிந்து நின்றான். சீவகனிடத்துள்ள அன்பாலும், வருத்தத்தாலும் நந்தட்டன் கடிந்து கூறுகிறான் என்று எண்ணி அவனைக் காந்தருவதத்தை பொறுமையுடன் தேற்றினாள். சீவகன் வேற்றுருவம் கொண்டு மறைந்திருப்பதையும் நந்தட்டனுக்குக் கூறினாள். சீவகன் இருக்குமிடத்தைக் காண்பதற்கு ஆவல் கொண்ட நந்தட்டன் மகிழ்ச்சியுற்றான். தான் அறியாமல் பிதற்றியதற்கு மனம் வருந்தினான்.

"வீரனே! உன் தமையனார் நம்மை மறந்து பல கல்யாணங்களைச்செய்து இன்பமுடன் வாழ்கிறார். அந்நிகழ்ச்சிகளை யெல்லாம் மதிமுகம் என்னும் விஞ்சையால் (மந்திரத்தால்) யான் அறிந்திருக்கிறேன். அப்படியிருக்க, ஐயனுக்குத் துன்பம் வந்தது என்று வருந்துவதில் என்ன பயன்? வீர! யான் ஏவும் காரியத்தைச் செய்தால் உன் தமையனாரைக் காண்பாய்" என்று கூறி புன்னகை செய்தாள் காந்தருவதத்தை.

"அன்னையே! இப்பிறப்பில் அல்லாமல் ஏழுபிறப்பிலும் யான் அடிமையாகக் கடவேன்" என்று கூறி நந்தட்டான் வணங்கினான். உடனே காந்தருவதத்தை ஒரு விஞ்சையைச் சொல்லித் தன் முகத்தைத் தடவினாள், உடனே அந்த விஞ்சை சீவகன் இருக்குமிடத்தை நந்தட்டனுக்குக் விளக்கியது; 'சீவகன் ஒரு கட்டிலில் அமர்ந்து கனகமாலைக்குக் கற்பகமாலையைச் சூடி அலங்கரித்துக்கொண்டிருக்கும் காட்சியைக் கண்டு நந்தட்டன் வணங்கினான், அவ்விஞ்சையை உடனே அவள் மாற்றினாள்.

"அன்னையே! சீவகசாமியின் பாதத்தை யான் அடைகிறேன். அருள் செய்யவேண்டும்" என்று கூறினான் நந்தட்டன். 'சீவகன் சுதஞ்சணனை நீங்கிய பின் உருவம் முதலியவற்றை மாற்றிக் கொண்டிருக்கிறான். ஆகையால், அவனை நந்தட்டன் பார்த்தால் முடியாது. அல்லாமல் அரசனுடைய அரண்மனையில் அந்தப்புரத்தில் நந்தட்டன் தன் உருவத்துடன் சென்றால் தீங்கு உண்டாகும்; சீவகனை இவன் பார்க்கும் வரையில் சீவகன் போன்ற வடிவமே இவனுக்கும் இருக்க வேண்டும்' என்று காந்தருவதத்தை நிச்சயித்தாள். உடனே சேடியரை அழைத்து, "மாலை, சந்தனம், ஆடை, ஆபரணங்கள் வாள்முதலியவற்றைக் கொண்டு வாருங்கள்" என்று கூறினாள். அவற்றை உடனே கொணர்ந்தனர் சேடியர்: "வீர! இவற்றை நீ அணிந்து கொள்" என்று நந்தட்டனுக்குச் சொன்னாள்: அவள் கட்டளைப்படி ஆடையாபரணங்களைத் தன் மேனி மீது அணிந்து கொண்டான். வாள் முதலிய ஆயுதங்களை ஏந்திக் கொண்டான். வேற்று வடிவம் கொண்ட சீவகனைப் போலவே நந்தட்டன் விளங்குவதைக் கண்டு காந்தருவதத்தை உவகை கொண்டாள். உடனே ஆகாசகாமினி என்ற மந்திரத்தை உச்சரித்தாள். பின்னர், சேடியரைக் கொண்டு, ஓரிடத்தைச் சந்தனத்தால் மெழுகச் செய்து, பூக்களை உதிர்த்து அகிற்புகையைப் புகைத்து அவ்விடத்திற் போட்ட படுக்கையில் நந்தட்டனைப் படுக்கும்படிக் கூறினாள்.

நந்தட்டன உடனே மன்மதன் தம்பி போல் ஒளிவிசும் மேனியுடையவனாய்ச் சென்று படுக்கையிற் படுத்தான். உடனே உறங்கியவன் போலானான். காந்தருவதத்தை உடனே சேடியருடன் அவ்விடத்தை நீங்கி மாளிகையினுள்ளே சென்றாள். நந்தட்டன் கிடந்த அறையில் ஒரு பூதம் தோன்றியது. உடனே அவனை எடுத்துக்கொண்டு போய் விடியற்காலத்து இருளில் ஏமமாபுரத்தில் உள்ள சீவகன் வாழும் அரண்மனையில் படுக்க வைத்து மறைந்து சென்றது.

••

விசயன் முதலிய அரசிளங்குமரர் வில்வித்தை பழகும்இடத்தில் நந்தட்டன் உறங்கிக்கொண்டிருந்தான். அரண்மனை வேலைக்காரியாகிய வசுந்தரி என்பவள் அப்போது வில்வித்தை பழகும் இடத்தை வழிபடுவதற்குத் தூப தீபங்களும் பூவும் ஏந்தி வந்தாள். அந்த இடத்தை அவள் அணுகியதும் பூமியில் உறங்கிக்கிடந்த நந்தட்டனைக் கண்டாள், 'கனகமாலையின் கணவன் என்று மயங்கித் துணுக்குற்று 'ஐயன் வெறுநிலத்தில் கிடப்பதற்குக் காரணம் என்ன' என்று எண்ணிக் கனகமாலையைக் கோபித்தற்கு விரைந்து போனாள். அந்தப்புரத்தில் படுக்கையில் கனகமாலையும் சீவகனும் மகிழ்ந்திருப்பதைக் கண்டு வசுந்தரி துணுக்குற்றாள். 'இது என்ன அதிசயம்! கனகமாலையின் கணவன் பெரிய மாயாவியோ?' என்று எண்ணிப் பயந்து கனகமாலையின் தமையன் விசயன் இருக்குமிடம் ஓடினாள். வசுந்தரி ஓடி வந்ததைக் கண்டதும், "வசுந்தரி, என்ன விசேஷம்?" என்று விசயன் கேட்டான்.

"இளவரசே! வில்வித்தை பயிலும் இடத்தை யான் தீபதூபமிட்டு வணங்கச் சென்றேன். அங்கே வெறு நிலத்தில் கனகமாலையின் கணவர் உறங்கிக்கிடந்தார். யான் கனகமாலையிடம் கோபம் கொண்டு அவளைக் கேட்பதற்கு, விரைந்து அந்தப்புரம் சென்றேன். ஆனால் அங்கும் படுக்கையில் கனகமாலையுடன் ஐயன் இருக்கிறார்; அவர் செய்தி பெரிய மாயமாயிருக்கிறது: பாதுகாத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிச் சென்றாள் வசுந்தரி.

அதைக்கேட்டு விசயன் வியப்பும் அச்சமும் அடைந்தான். உடனே விரைந்து வில்வித்தை பழகும் இடத்திற்குச்சென்றான். அப்போது நன்றாகச் சூரியோதயம் ஆகிவிட்டது. நந்தட்டனும் உறங்கி விழித்தவன்போல் எழுந்து உட்கார்ந்தான். அச்சமயம் விசயன் அவ்விடத்திற்கு வந்து நந்தட்டனைக் கண்டான். வசுந்தரியைப் போலவே விசயனும் சந்தேகம் அடைந்தான். சிறிது உற்றுப் பார்த்த பின் 'இவன் வேறு ஐயன்வேறு' என்று அறிந்துகொண்டான்.

"ஐயனே! நீ யார்?" என்று விசயன் கேட்டான். ஊழ்வினையால் நந்தட்டனுக்கு மறுமொழி கூற நா எழவில்லை; பேசாமல் உட்கார்ந்திருந்தான், உடனே விசயனுக்கு அதிசயமும் ஐயமும் உண்டாயின. விரைவாகச் சீவகன் இருக்குமிடம் சென்று அவனிடம் கூறலானான்.

"ஐயனே! வசுந்தரி, வில்வித்தை பயிலும் இடத்தை வணங்கச்சென்றனளாம். அங்கு வெறு நிலத்தே தாம் உறங்குவதைக் கண்டு கனகமாலையைக் கோபிக்க இங்கு வந்தனளாம். இவ்விடத்திலும் தாம் இருக்க மனம் மயங்கி என்னிடம் வந்து கூறி 'ஐயன் செய்தி மாயமாயிருக்கிறது. பாதுகாத்துக்கொள்ளுங்கள்' என்றும் கூறிச்சென்றாள். யான் சென்று அவனைப் பார்த்தேன். அவன் உம்முடைய உத்தம இலக்கணத்தை உடையவனாய் இருக்கிறான்: நீண்ட தோளுடையவன். சிவந்த கண்ணையுடையவன்; நீல நிறத்தையும் குழற்சியையும் உடைய தலைமயிருடையவன் மாலைகளை அணிந்த அவன் மேனி பொன்னைப்பூசினாற்போன்று விளங்கு